திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மதுரை மாவட்டத்தில் கொள்முதல் செய்கின்ற நெல்லை உடனடியாக அரிசி மில்களுக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த லாபத்தைச் கருதி மக்களுக்கு மிகவும் மோசமான அரிசியைக் கொடுத்து வருகிறார்கள். ஆகவே, அந்த அந்தப் பகுதியில் உள்ள தனியார் ரைஸ் மில்களை சர்க்காரே எடுத்து நடத்துமா ? கூட்டுறவுத் துறையில் எடுத்து நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையின் அடிப்படையில் தான் 12 புதுமை அரிசி மில்களை அதுவும் 71 சதவீதம் அவுட்டர்ன் கொடுக்கக்கூடிய அரிசி மில்களைக் கூட்டுறவுத் துறையில் கொண்டுவருவதற்கு அரசாங்கமே திட்டமிட்டு அதற்கான வேலைகள் நடக்கின்றன.

திரு. சி. கே. சின்னராஜி : அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அரிசி கொடுப்பது படிப்படியாக அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்றார்கள். கோதுமை, மைதாவையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே ஏ. மதியழகன் : கோதுமை பற்றி நாம் பேசும் போது அதை எடுத்துக் கொள்ளலாம்.

பதுக்கல்காரர்கள் மீது வழக்குகள்

வினா *155—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு எத்தனை பதுக்கல்காரர்கள், கள்ளச் சந்தையாளர்கள் மீது வழக்குகள் தொடர்ந்துள்ளது ?

(இ) எத்தனை வழக்குகள் வெற்றி பெற்றன ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN

Number of cases booked—	
Hoarding	763
Blackmarketing	66
Number of persons arrested—	
Hoarding	331
Blackmarketing	263
Number of cases prosecuted—	
Hoarding	61
Blackmarketing	52
Number of cases ended in conviction—	
Hoarding	29
Blackmarketing	11
Number of cases under investigation—	
Hoarding	274
Blackmarketing	14

1968 மார்ச் 6]

திரு. பெ. மலைச்சாமி : இப்படிக் கண்டு அறியப்பட்ட சமூக விரோதிகளை, பஞ்சாப் மாநிலத்தில் செய்வதைப் போன்று, கையில் விலங்கிட்டு வீதியில் அழைத்து வந்து, தூக்குத் தண்டனை போன்ற கடுமையான தண்டனையை அளிக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் அங்கத்தினர் சொல்வது மிகவும் கடுமையான தண்டனையாகும். இப்போதுள்ள சட்டப்படியே நடவடிக்கை எடுத்துக் கொண்டால் அது நல்ல பலனை அளிக்கும் என்று நம்புகிறேன். குறிப்பாக இப்போதுள்ள முறைப்படி கள்ளக் கடத்தல் செய்யப்படுகிற வாகனங்களைப் பறிமுதல் செய்ய கோர்ட்டுக்குத் தான் அதிகாரம் இருக்கிறது. சர்க்காருக்கே இந்த அதிகாரம் இருக்க என்ன செய்வது என்பது யோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. பா. சாரதி : தலைவர் அவர்களே, பதுக்கல் காரணமாக' கள்ளச் சந்தை காரணமாகப் பிடிக்கப்பட்ட பொருள்கள் என்ன மதிப்பு என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைப் பற்றிய விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்ல முடியும்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : பெருநிலக்கிழார்களும், நிலச்சுவான்தார்களும் தான் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். சிறுநிலக்காரர்கள் இதில் ஈடுபடுவதில்லை. ஆகவே, இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுகிற பெருநிலக் கிழார்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : யாராக இருந்தாலும் குற்றம் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள இந்த அரசாங்கம் ஒருகாலும் தயங்காது.

திரு. பி. துரைராஜ் : தலைவர் அவர்களே, பொதுமக்களுக்கு விநியோகிக்க வேண்டிய ரேஷன் அரிசியை மக்களுக்குக் கொடுக்காமல் கள்ள மார்க்கெட்டில் விற்பனை செய்தார்கள் என்பதாலே கையும் களவுமாகப் பிடித்து அவர்களைப் போலீஸில் ஒப்படைத்தும்கூட அவர்கள் சட்டபூர்வமாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அதிகாரங்கள் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அப்படியில்லாமல் அப்படிச் செய்கிற நியாய விலைக் கடைக்காரர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுக்கும்வகையில் அதிகாரம் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது தவறான வாதம். எந்த ஊரிலே எப்பொழுது அப்படிச் செய்தார்கள் என்று சொல்ல வேண்டுமே தவிர, சபையிலே தவறான நிலைமையில் பேசுவது பொருத்தமும் அல்ல, அழகும் அல்ல.

திரு. க. இராமமூர்த்தி : பதுக்கல்காரர்கள் சம்பந்தமாக வழக்கு மன்றங்களுக்குச் சென்ற வழக்குகள் எத்தனை ? திரும்பப் பெறப்பட்ட வழக்குகள் எத்தனை ? சம்பந்தப்பட்டவர்களுடன் சமரஸம் செய்து திரும்ப பெற்றுக் கொண்ட வழக்குகள் எத்தனை என்று சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: திரும்பப் பெறப்பட்ட வழக்குகள் எதுவும் இல்லை. ஆனால் நம்பர் ஆப் கேஸஸ் டிராப்ட் என்பதில் 85 வழக்குகள் இருக்கின்றன. வழக்குகள் பதுக்கல்காரர்கள், ப்ளாக் மார்க்கெட்டிங் செய்தவர்கள் மீது இருக்கின்றன. சில வேளைகளில் பதுக்கலைப் பிடித்தவுடனே அவற்றைப் பறிமுதல் செய்து கொண்டு அரசாங்க கணக்கிலே அதைச் சேர்த்துக் கொள்கிறோம், அப்படிப்பட்ட வழக்குகள் தான் திரும்பப் பெறப்படுகின்றனவே தவிர வேறு ஒன்றும் இல்லை.

திரு. ஆர். நாகசுந்தரம் : திருச்சிக்கும் கரூருக்கும் இடையிலே ரயில் வண்டிகளிலே பெருமளவு அரிசி கடத்தப்படுகிறது. இதைப் பற்றிய தகவல்கள் உண்டா ? அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தகவல் உண்டு. திருச்சியிலே மட்டுமல்லாமல் ஈரோடுக்குப் பக்கத்திலேயும் * நிரம்ப இந்த மாதிரியான நிலைமைகள் இருக்கின்றன என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ரயில்வே அதிகாரிகளிடத்தில் இப்படிப்பட்ட நிலைமைகளைத் தெரிவித்து பாலக்காடு, மதுக்கரை போன்ற இடங்களிலும், செங்கோட்டை, போத்தனூர் போன்ற இடங்களிலும் பரிசோதனை செய்து நல்ல முறையில் கண்காணிப்பு நடைபெற்று வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது பிராசிக்யூஷன் செய்யப்பட்ட கணக்கைச் சொன்னார்கள். தண்டனையான கேஸ்களின் கணக்கையும் சொன்னார்கள் தண்டனையான கேஸ்கள் குறைவாக இருக்கின்றனவே, பாக்கிக் கேஸ்கள் எல்லாம் பெண்டிங் ட்ரயல் ஆக இருக்கிறதா அல்லது தள்ளுபடியாகிவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN :

Number of cases prosecuted	61
Number of cases ended in conviction	29

இது ஒரு பெரிய காரியம். சர்க்கார் கேஸ்களிலே சட்டத்திலே இருக்கின்ற சந்து பொந்துகளிலே இவ்வளவு 61-க்கு 29 கேஸ்களில் தண்டனை என்ற அளவில் இருப்பது பதுக்கல், பிளாக் மார்க்கெட் எல்லாம் ஒரு நுண் கலையாக இருக்கிறது. பெருமைபடத்தக்கது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் துணைக் கேள்வியின் தொடக்கமே விதி 31 (5)-க்கு புறம்பாக இருக்கிற காரணத்தினாலே நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றுவதற்கு நான் கடமைப்பட்டவன் என்பதால் அதிலிருந்து இதுவரை உள்ளவற்றை நீக்கிவிடும்படி கட்டளையிடுகிறேன்.

THIRU K. VINAYAKAM : I want to allay the fears. The Minister was pleased to give a detailed statement about the number of cases launched and the number prosecuted. Will the Government be pleased to place on the table of the House information as to how many cases ended in acquittal, how many cases were withdrawn by the Government after compromising with the party and in how many cases the High Court has passed strictures on the Government for launching improper cases as in the Poonamallee case ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The Government is prepared to place the information on the table of the House if a separate question is put. The Government did not compromise. Procurement operations should not suffer and only in the public interest the Government took whatever action was taken.

**பேரவைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பட்டது.

1968 மார்ச் 6]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இத்தகைய லாரிகளைப் பறிமுதல் செய்வதற்காகச் சட்டத்தைத் திருத்த இந்த அரசாங்கத்திற்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்தக் கருத்து அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி* இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(i) ஆந்திர மாநில சட்டப் பேரவையில் தமிழக அரசின் நிர்வாகம் பற்றிய கூற்று.

* திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: தலைவர் அவர்களே, விதி 42-ன் பிரகாரம் கீழ்க்கண்ட ஒற்றிவைப்புப் பிரேரணையை இந்தச் சபையின் முன் கொண்டு வருகிறேன்:—

"ஆந்திர மாநில சட்டப் பேரவையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் ஒருவர் தமிழ் மாநிலத்தில் சட்டமும் அமைதியும் குலைந்து விட்டது எனப் பேசி தமிழக அரசின் நிர்வாகம் பற்றி ஒரு தவருன எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கிருர்".

இந்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை குறித்து விவாதிக்க சபையின் அலுவல்களை ஒற்றி வைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

தலைவர் அவர்களே, ஆந்திரத்திலுள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர் நம்முடைய அரசின் நிர்வாகம் பற்றித் தாறுமாருகச் சட்ட மன்றத்தில் பேசி காங்கிரஸ் அல்லாத அமைச்சரவை மீது தவருன எண்ணம் ஏற்படும் வகையில் பேசியிருக்கிருர். காங்கிரஸ்காரர்கள் இவ்வாறு காங்கிரஸ் அல்லாத அரசைப் பற்றித் திட்டமிட்டு அவதூருக மேடையிலும், சட்ட மன்றத்திலும் தவருன கருத்தை வெளியிட்டு வருகிருர்கள். அந்த முறையில்தான் ஆந்திர அசெம்பிளியில் பேசியிருப்பதாகக் கருதியிருக்கிறேன. இவ்வாறு பேசுவது மக்கள் மத்தியில் தவருன எண்ணத்தை உண்டாக்க வழி செய்யுமாதலால் நம்முடைய சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே' மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஒத்திவைப்புத் பிரேரணை மீது விவாதத்தை நடத்திஞல் எந்த அளவுக்கு ஆந்திர சட்ட மன்றத்திலே நடந்திருக்கிறதோ அதே மாதிரி தவறு இங்கும் நடந்து விடுமோ என்று அஞ்ச வேண்டியவர்களாக இருக்கிறோம். அங்கு அவ்வாறு பேசியது எந்த அளவுக்குச் சட்டத்திற்குப் புறம்பானது, நம்முடைய சட்ட மன்றம் பாதிக்கப்படுகிறது என்பதைப் பற்றி ஆராய்ந்து அந்த அரசுக்கு எழுதி விளக்கங்கள் கேட்டுப் பெற்ற பிறகு அந்தப் பிரச்சினை பற்றிப் பேசுவது பொருத்தமாக இருக்கும். சபாநாயகர் அவர்கள் இதைப் பற்றி எழுதி விளக்கங்கள் கேட்டுப் பெறமுடியும். ஆகவே, சபையை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிப்பது இப்போது பொருத்தமாக இருக்காது என்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.